*5*

# கிறிஸ்தவ ஊழியத்தின் இருதயம்

## (எபேசியர் 4:7-16)

*எபேசியர் 2ல் தேவன் ஆச்சரியமான மனமாற்ற நிகழ்வின் செயல் முறையை விவரிக்கிறார். ஜனங்கள் பாவ இருளிலிருந்து தப்பிக் கொள்ள ஏதுவாக ஒரு கிருபையுள்ள திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது (காண்க எபேசியர் 2:8, 9). மனமாற்றத்தின் விளைவைக் குறித்து பவுல் சாராம்ஸமாக: "ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" என்று கூறினார் (எபேசியர் 2:10). இரட்சிக்கப்பட்டவுடன் கிறிஸ்தவன் கர்த்தருக்குத் தன்னை ஊழியக்காரனாக வித்தியாசப்படுத்திக் கொள்கிறான்.*

*இதற்கு ஒத்த இன்னொரு வசனப்பகுதி ஒரு நபர் மனமாற்றப்பட்டவுடன், அவரது எண்ணம் மாறுபடுவதால் அவர் ஊழியம் செய்கிறார் என்று ஆலோசனை கொடுக்கிறது: "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" (கொலோசெயர் 3:22ஆ). மனமாற்றப்படுகிற ஒருவன் ஒவ்வொரு செயல்பாட்டையும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிற வெளிப்பாடாகவே பார்க்கிறான். நற்கிரியைக்காக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன், மனமுவந்து கர்த்தராகிய தேவனுக்கு ஊழியம் செய்வதை வெளிப்படுத்துவான்! அவன் எதைச் செய்தாலும் அவன் தேவனிடத்தில் தான் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக செயல்படுகிறான். அவனுடைய பணியால் மற்றவர்கள் கிறிஸ்தவத்தின் ஒளியை காண்கிறார்கள் - மற்றும் தேவன் மகிமையடைவார் (மத்தேயு 5:14-16). நற்கிரியை செய்வது இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 14:13). கிறிஸ்தவன் இந்தப் பணியை சந்தோஷத்தோடே நிறைவு செய்கிறான். அவன் மகிழ்ச்சியோடே அப்படிப்பட்ட ஊழியங்களிலே தன்னை உட்படுத்திக் கொள்ளுகிறான், ஏனெனில் ஊழியத்தின் ஒவ்வொரு செயல்பாடும் இரட்சிப்பின் சந்தோஷத்தை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.*

*கிறிஸ்தவனின் சேவை இரண்டு பகுதிகளைக் கொண்டது - சமுதாயத்திலே நடப்பிக்கப்படும் சேவை (தீத்து 3:1) மற்றும் உள்ளூர் சபைக்குள்ளே நடப்பிக்கப் படும் ஊழியம் (யூதா 20; 1 கொரிந்தியர் 12:12-27). சபையை எடுப்பித்துக் கட்டுகிற ஊழியப் பணியின் சரியான எண்ணத்தை பவுல் நன்கு வெளிப்படுத்தி,*

*“நான் உங்கள் ஆத்துமாவுக்காக செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்” என்றார் (2 கொரிந்தியர் 12:15ஆ).*

*இந்த ஊழியத்தன்மை எனும் எண்ணப்போக்கு எபேசியர் 4:7-16ல் விவாதிக்கப் படுகிறது. பவுல், சபையிலே “ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே,” அது “அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது” என்றார் (வசனம் 16). ஒவ்வொரு நபருக்கும் திறமை (தாலந்து) இருக்கிறது, அது “சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடையும்படியாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்” (வசனம் 12). சபையை பக்தி விருத்தியடையச் செய்ய நீங்கள் என்ன செய்ய முடியும்? கர்த்தருக்குள் சகோதரர்களை பலப்படுத்த நீங்கள் என்ன ஊழியத்தைக் கொடுப்பீர்கள்? இப்பொழுது உங்களுடைய எண்ணங்கள் கிறிஸ்துவுக்கென்று மனமாற்றப்பட்டுள்ளது, எனவே இது எப்படி உங்களை உட்படுத்தி ஒப்புக்கொடுத்த வேலையைச் செய்ய உதவிகரமாயிருக்கும்?*

*கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் தேவனுடைய பயன்பாட்டிற்காக நற்கிரியைச் செய்யும்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள். தேவனை மகிமைப் படுத்தும் தேவபக்தியின் எண்ணங்களை வெளிப்படுத்துகிற ஊழியத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும். மனம்மாற்றப்பட்ட விசுவாசி ஊழிய வாஞ்சையை வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்துகிற இருதயம் உள்ளவராக மட்டுமல்ல, சபையைப் பக்தி விருத்தியடையச் செய்கிற பணியிலும் தன்னை உட்படுத்தி விசேஷமாக தன்னை ஒப்புக்கொடுத்த ஊழியத்தையும் செய்கிறான்! ஒருவர் சமுதாய நலத்திட்டங்களில் அநேக நல்ல திட்டங்களை செயல்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கலாம், ஆனால் தனது பகுதியில் கர்த்தருடைய சபையின் வேலைகளில் பங்குபெறத் தவறுவார். இந்தப் பாடம் கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றிய விளக்கத்தையும் சபையில் சேவை செய்வதற்கான காரணத்தையும் கொடுக்கிறது.*

## *கிறிஸ்தவ ஊழியம் ஈடற்றது (4:7)*

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் செயல்படுத்தக் கூடிய ஊழியத்திறமையைப் பெற்றிருக்கிறான். “நம்மிலே ஒவ்வொருவரும்” தேவனுக்கு ஊழியஞ் செய்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்று பவுல் குறிப்பிட்டார். ஒருவரும் வெளியே விட்டு விடப்படுவதில்லை. ஒவ்வொருவரும் உள்ளூர் சபைக்கு எந்த வகையிலாகிலும் உதவி செய்கிற திராணியைப் பெற்றிருப்பார். சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கிறிஸ்துவின் “கிருபை” அளிக்கப் பட்டிருக்கிறது, மிகவும் புதிதாய் வந்த கிறிஸ்தவன்கூட ஊழியஞ்செய்ய அது ஏதுவாக வாய்ப்பளிக்கிறது. இந்த கிருபை ஒவ்வொரு சபை அங்கத்தினரையும், தேவனுக்கு ஊழியஞ் செய்கிற காரியத்தில் போதிய பெலத்தையும், ஊக்கத்தையும், அன்பையும், அக்கரையையும் ஆசீர்வாதமாகக் கொடுக்கிறது. தேவனுடைய ஊழியத்தை சபையில் செய்ய ஒவ்வொருவருக்கும் திராணியுண்டு.*

*நீங்கள் ஒரு உள்ளூர் சபையை கட்டி எழுப்புவதில் எப்படி ஊழியம் செய்ய முடியும்? ஈடு இணையற்ற முறையில் உங்களிடத்தில் மட்டும் நீங்கள் கொண்டுள்ள தாலந்துகளும் திறமைகளும் என்ன? மற்றவர்கள் என்ன*

*செய்கிறார்களோ அதை நீங்களும் செய்ய வேண்டிய அவசியமில்லை. நீங்கள் செய்ய வேண்டுவதெல்லாம் உங்கள் திராணிக்கு ஏற்ப தேவனுக்கு ஊழியஞ் செய்யுங்கள்! அநேகர் தங்களைத் தாங்களே, பார்த்து சொல்லுவார்கள், "என்னிடத்தில் 'பெரிதாக' எந்த தாலந்தும் இல்லை; எனக்கு இருப்பதெல்லாம் 'சிறிய' தாலந்துகள் மட்டுமே என்பார்கள்." இப்படிப்பட்ட எண்ணத்தைத் தான் தீர்க்கதரிசி சகரியா எதிர்கொண்டார். ஒரு சில சிறிய காரியங்களை மட்டுமே நடப்பிக்க முடிந்தது, மற்றபடி எல்லாமே தோல்விதான் என்று நம்பிய ஜனத்தாரோடே சகரியா பேசினார். தீர்க்கதரிசி மூலமாக பேசி, "அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம் என்றார்?" (சகரியா 4:10அ).*

*உள்ளூர் சபையை எடுத்துக்கட்டி பக்தி விருத்தியடையச் செய்யும் கடின வேலையில் ஒவ்வொரு அங்கத்தினரும் உதவி செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அங்கத்தினர்கள் தங்களை குறைவாக மதிப்பிட்டு தங்களுடைய பிரயாசங்கள் "மிகவும் அற்பமானவை" அல்லது "முக்கியமற்றது" என்று பேசிக் கொண்டிருப்பார்களானால் தேவனுக்கு எவ்வித ஊழியத்தையும் அளிக்க இயலாது. பவுல் எபேசியர்களை நினைப்பூட்டி தேவன் அவர்களில் "ஒவ்வொருவருக்கும்" தாலந்துகளை கொடுத்திருக்கிறார், அந்தத் தாலந்துகளை அவருடைய ஊழியத்துக்குப் பயன்படுத்தலாம் என்றார்.*

*வருகிறவர்களெல்லாம் வியந்து பாராட்டும் வகையில் ஒரு அழகிய சபைக் கட்டிடத்தைக் குறித்து ஒரு கதையுண்டு. அந்தக் கட்டிடத்திற்கு தகுந்த வண்ணப்பூச்சு செய்யப்பட்ட சுவர்கள், கறையற்ற - வண்ண கண்ணாடி ஜன்னல்கள், சுகமான இருக்கைகள், நன்கு வடிவமைக்கப்பட்ட பிரசங்க பீடம் ஆகியவை குறித்து புகழ்ந்தார்கள். கூரையின் நீண்ட பலகைகளைத் தாங்கிப் பிடித்து கொண்டிருந்த, மேல்கூரையின் ஆணி இந்த உரையாடல்களைக் கேட்டது. அந்த ஆணி தன்னை யாரும் புகழ்வதைக் கேட்க முடியவில்லை. அது சிந்திக்கத் துவங்கியது, "நான் ஒன்றுமில்லை. என்னைக் கவனிப்பார் யாருமில்லை. என்னை யாரும் புகழுவதில்லை. நான் தேவையற்றவன். நான் வேண்டப்படாதவன்." தனிமையில், வாடிவதங்கி, இந்த ஆணி ஒரு நாள் தன்னை தானே இழுத்துக் கொண்டது, நேர்க் குத்தலான கூரையிலிருந்து தரையிலே விழுந்தது. அன்று இரவு, மழை வந்தது, ஆணி சேற்றிலே புதைந்தது. தொடர்ந்து மழையடித்துக் கொண்டிருக்க, அந்த ஆணி பிடித்துக் கொண்டிருந்த நீண்ட பலகை பிடிமானம் தளர்ந்து, இடம் பெயர்ந்து அதின் நிலையிலிருந்து வழுவியது, அந்த அழகிய கட்டிடத்திற்குள் மழைநீர் புக ஆரம்பித்தது. கவர்ச்சியாய் காட்சியளித்த சுவர்கள் கறைபிடித்தன. சுகமான இருக்கைகளில் சில தண்ணீரில் நனைந்து நாசமாயின. ஒரு ஆணி "நான் ஒன்றுமில்லை" என்று நினைத்து தன் வேலையைச் செய்ய மறுத்ததால் இவ்வளவும் நிகழ்ந்து விட்டது![1] (காண்க 1 கொரிந்தியர் 12:22.)*

*நீங்கள் கிறிஸ்தவனாக மாறியதால் உங்கள் நிகரற்ற தாலந்துகளை ஒரு உள்ளூர் சபையிலே பயன்படுத்தி தேவனுடைய ஊழியத்தை செய்ய பிரதிபலனளிக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டுள்ளது. ஒருபோதும் உங்கள் கர்த்தரின் வேலையை குறைவாக மதிப்பிட்டு அல்லது குற்றப்படுத்தி பேசி மற்றவர்கள் செய்வதை நீங்கள் செய்ய முடியவில்லையே என்று நினைக்காதீர்கள்! உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை எளிமையாய் பயன்படுத்துங்கள்.*

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக் கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன் (ரோமர் 12:6-8).

தேவ ஆசீர்வாதம் பெற *எதுவும்* அற்பமானதாகக் கருதப்படுவதில்லை! கிறிஸ்தவனாக, கர்த்தருடைய சபை உறுதியான விசுவாசத்தில் பெலப் படவும் தேவனுடைய எதிர்பார்ப்பின்படி வளரவும் உங்களால் என்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வதே உங்கள் முதன்மையான அக்கறையாக இருக்க வேண்டும்! தேவனுடைய இராஜ்யத்தில் ஊழியம் செய்யும்படி நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்![2] மாற்கு 14:8அ வில் ஒரு ஸ்திரீயைக் குறித்து கர்த்தர் சொன்னபடியான அதே புகழுரையைப் பெற நாமெல்லாரும் முயற்சிப்போம்: "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்."

## கிறிஸ்தவ ஊழியம் என்பது பரஸ்பர பரிமாற்றம் (4:7ஆ-10)

ஒரு கிறிஸ்தவன் அவனது அல்லது அவளது தாலந்துகளை ஏன் தேவனுடைய ஊழியத்திற்கென்று பயன்படுத்தவேண்டும்? இதற்கான பதில் மிகவும் எளியது; ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவால் நடப்பிக்கப்பட்ட ஊழியத்தை அறிந்திருக்கிறான். ஆதலால் கர்த்தர் தமது ஊழியத்தைச் செய்த அதே எண்ணத்துடன் ஊழியஞ்செய்கிறான். (கலாத்தியர் 2:10; 1 தீமோத்தேயு 1:12-17ஐக் காண்க.) பவுல் பிலிப்பிய கிறிஸ்தவர்கள் தங்கள் எண்ணத்தில் தாழ்மையான ஊழியக்காரர்களாயிருக்கும்படி அறிவுறுத்த கர்த்தருடைய உதாரணத்தை ஒரு பெரிய தூண்டுகோலாய் பயன்படுத்துகிறார். அவர், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று எழுதினார் (பிலிப்பியர் 2:5).

இயேசு கிறிஸ்து ஊழியமாகிய தமது ஈவை இன்றும் கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஏனெனில் அவர் பூமிக்கு வந்து மரணத்தை அனுபவிக்கவும் மனவிருப்பமுள்ளவராயிருந்தார். நாம் கிறிஸ்துவின் பலியை சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருப்போமாகில், நாமும் மனமுவந்து பலி செலுத்துவோம். பிலிப்பியர்கள் கிறிஸ்துவால் விளக்கமளிக்கப்பட்ட ஊழியம் செய்யும் எண்ணம் இன்னது என்று உணர்ந்து கொண்டதற்கு ஏற்றாற்போல் செயல்பட்டார்கள். பவுல் அவர்களைப் புகழ்ந்து, "... உங்கள் கணக்குக்கு பலன் பெருகும்படியே நாடுகிறேன் ... . உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்," என்று எழுதினார் (பிலிப்பியர் 4:17ஆ, 18).

ஒப்பிட முடியாத ஊழியம் கிறிஸ்து இயேசுவால் செய்யப்பட்டதைப் பாராட்டும் வகையில் கிறிஸ்தவர்கள் சபையிலே ஊழியம் செய்கிறார்கள்.

*உங்கள் தாலந்துகளை எண்ணிப் பாருங்கள், அவைகளை கர்த்தருடைய சபையில் உள்ளூர் சபையானது பெலப்படுத்தப்படத்தக்க வகையில் பயன்படுத்தி ஊழியம் செய்யுங்கள்!*

## கிறிஸ்தவ ஊழியம் வடிவமைக்கப் பட்டது (4:11)

தேவன் தமது சபையை குறிப்பிடத்தக்க வகையில் செயல்படக் கூடியதாக வடிவமைத்திருக்கிறார். அவர் அதற்கான வடிவமைப்பை திருமறையில் குறிப்பிட்டுள்ளார் எனவே நாம் எந்த மாற்றமும் அதிலே செய்வதை அவர் விரும்புவதில்லை. கிறிஸ்தவர்கள் திருமறை ரீதியான வடிவமைப்பை பின்பற்றும்படி தேவன் எதிர்பார்க்கிறார் எனவே அதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது (1 கொரிந்தியர் 4:6).

கர்த்தருடைய சபையின் ஆளுகை அமைப்பில் முதலாவதாக தற்காலிக ஊழியப்பணியும் பிறகு நிரந்தர ஊழியப்பணியும் ஏற்படுத்தப்பட்டது. சபை முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்டபோது, சபையை ஆள அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தேவைப்பட்டார்கள். தேவனுடைய வெளிப்படுத்துதல் எழுதப்பட்டபின் அப்போஸ்தலர்களோ தீர்க்கதரிசிகளோ தேவைப் படவில்லை. ஏனெனில் மற்றவர்கள் எழுதப்பட்ட வெளிப்பாடுகளை வாசித்து தேவனுடைய திட்டங்களைப் புரிந்துகொள்ள முடியும் (எபேசியர் 3:3-5). இருப்பினும், எழுதப்பட்ட வெளிப்பாடுகளைத் தொடர்ந்து உலகமுழுவதும் போதிக்க வேண்டிய அவசியமிருந்தது. கர்த்தருடைய சபையில் நிரந்தரமாக பணிபுரியக் கூடியவர்கள் போதிக்க வேண்டும். நிரந்தரப் பணியாளர் என்போரில் சுவிசேஷகர் (சுவிசேஷ வசனத்தைப் போதிப்பவர்கள்), மேய்ப்பர்கள் (உள்ளூர் சபையை கண்காணித்து நடத்தும் மூப்பர்கள்), மற்றும் போதகர்கள் (வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைப் போதிப்பவர்கள்) ஆகியோர் ஆவர். இந்த நிரந்தரப்பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் தேவனுடைய வசனம் சரியான முறையில் சென்று சேர்வதை பொறுப்புடன் நிறைவேற்றக் கடமைப் பட்டவர்கள். இப்படிப்பட்ட பணியில் நியமிக்கப்படாத கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தப்பட்ட வசனங்களை கேட்பதிலும், தேவனால் கொடுக்கப் பட்ட உபதேசங்களை மற்றவர்களும் கேட்கும்படி அறிவுறுத்தி கற்றுக்கொண்டு அந்த வசனங்களைப் பின்பற்றும்படி செயல்பட வேண்டும்.

புதிய கிறிஸ்தவர்களாகிய நீங்கள், தேவனுடைய வசனத்தை அதிகமாய்க் கற்று விசுவாசத்தில் வளர வேண்டும். தேவனுடைய சத்தியத்தைக் கற்றுக்கொள்ள உங்கள் முன்வைக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களை நினைத்துப் பாருங்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அல்லது தேவனுடைய வசனத்தை கொடுக்கும் போதகர்கள் வேதகல்வியைக் கொடுக்கும் போதும் அங்கே இருக்கப் பாருங்கள்.

## கிறிஸ்தவ ஊழியம் ஆக்கமுள்ளது (4:12-16)

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏன் சபையிலே ஊழியம் செய்ய வேண்டும்? உள்ளூர் சபையை எழுப்பிக் கட்ட இது மட்டுமே சரியான மனப்பான்மை! ஒவ்வொரு கிறிஸ்தவனும் உள்ளூர் சபையில் ஊழியம் செய்யும்போது மூன்று காரியங்கள் நடக்கும். *முதலாவதாக பூரணமான ஒற்றுமை அங்கே விளங்கும்*

*(வசனம் 13அ). ஊழியத்தில் தங்களை உட்படுத்தினவர்கள் பிரிவினைகளை உண்டுபண்ணத்தக்க நேரமுள்ளவர்களாகவோ சந்தர்ப்பத்தையோ உண்டுபண்ணிக்கொள்ள மாட்டார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:9-12; 2 தெசலோனிக்கேயர் 3:11-13). ஒவ்வொரு அங்கத்தினரும் மனவெழுச்சியோடு ஊழியத்திலே ஈடுபடும்போது ஒரு உள்ளூர் சபைக்கு அதிலே கிடைக்கிற மகிழ்ச்சிகரமான ஒற்றுமையை வேறெதினாலும் சேர்க்க முடியாது! இரண்டாவதாக, கிறிஸ்துவைப் பற்றி அறிவு அங்கே உண்டாயிருக்கும் (வசனம் 13ஆ). கிறிஸ்துவைப் பற்றிய அறிவை அதிகமாய்ப் பெற்றிருக்கும்போது எப்படிப்பட்ட மனப்பாங்கு உள்ளவனாய் கிறிஸ்தவன் இருக்க வேண்டும் என்றும், எப்படிப்பட்ட ஊழியத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் புரிந்துகொள்கிறான். மூன்றாவதாக, அங்கே பரிபூரணம் உண்டாயிருக்கும் (வசனம் 13இ). வித்தியாசப்பட்ட பிரயாசங்களில் பங்கேற்போர் விசுவாசத்தில் பூரணமாய் விளங்குவார்கள்.*

*கர்த்தருக்கு பிரயோஜனமாக ஆக்கமிக்கவராய் சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் விளங்க கடமைப் பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் மற்றவர்களை கிறிஸ்துவினிடம் கொண்டுவரும்படி அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். உள்ளூர் சபை அங்கத்தினர்களெல்லாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறார்கள் எனவே ஒவ்வொரு "அங்கமும்" கிறிஸ்துவின் சரீரத்தில் முறையாய் பணியாற்றுகிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். சபையை கட்டியெழுப்ப ஏதுவாக தேவன் தம்முடைய ஏவப்பட்ட வசனங்களை வெளிப்படுத்தி தமது பரிசுத்தவான்கள் தமது ஊழியத்தைச் செய்யத் "தேவையான உதவியை" அளித்து சபையைக் கட்டியெழுப்ப ஏதுவாக்கியுள்ளார். உள்ளூர் சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியம் செய்தாலொழிய அது தமது முழு பெலத்தோடு உச்சநிலையை அடைய முடியாது. உள்ளூர் சபையின் "வளர்ச்சிக்கு" ஒவ்வொரு சபையின் அங்கத்தினரும் பொறுப்பாளிகள் என்று வசனம் 16 காட்டுகிறது. அன்பினாலே சபையைக் கட்டியெழுப்ப ஒவ்வொரு அங்கத்தினரும் பொறுப்பாளிகள் ஆவர்!*

*புதிய கிறிஸ்தவனாகிய நீங்கள், உங்களை ஈடுபடுத்தி, தளராத உழைப்போடும், ஒப்புக் கொடுத்தலோடும் ஊழியஞ் செய்ய உங்களுக்கு கடமையுள்ளது. ஏன்? ஒவ்வொரு அங்கத்தினரும் எப்படி ஊழியம் செய்கிறார் என கணக்குக் கொடுக்க வேண்டியிருப்பதால். ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியஞ் செய்யத் தேவையான, ஒரு தாலந்தை அல்லது உள்ளூர் சபையில் பயன்படுத்தத் தேவையான பெலம் கொண்டுள்ளனர். ஆவலோடும் அன்போடும் கர்த்தருடைய சபையில் ஊழியம் செய்யவும் ஆசீர்வதிக்கப்பட கர்த்தரை பின்பற்றவும் வேண்டும்!*

*நீங்கள் தொழுகை செய்து கொண்டுள்ள உள்ளூர் சபையில் ஆக்கப் பூர்வமான அங்கத்தினராக இருக்க வேண்டும்! "ஆக்கப் பூர்வமான அங்கத்தினர்" மிக அதிகமாக வெளித் தோற்றமுடைய அங்கத்தினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆக்கமுடைய அங்கத்தினர் கிறிஸ்துவின் மனோபாவத்துக்கு ஏற்ற ஊழியஞ் செய்யும் ஒரு கிறிஸ்தவன்! அதன் விளைவாக, உள்ளூர் சபை அன்பினாலே கட்டப்படுகிறது. அங்கத்தினர்கள் இன்னும் அதிகமாக ஊழியஞ் செய்ய ஊக்கமளிக்கப்படுகின்றனர், மற்றும் விசுவாசம் பெலப்படுத்தப்படுகிறது.*

## நிறைவுறும் சிந்தனைகள்

*எபேசியர் 4:7-16 என்னே ஒரு மேன்மைப்படுத்தும் வசனப் பகுதிகளாகக் காணப்படுகிறது! ஒரு புதிய கிறிஸ்தவனாக, நீங்கள் உங்கள் உள்ளூர் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். இந்த உள்ளூர் சபையில் நீங்கள் தெய்வீக ஊழியம் செய்ய வேண்டும். உங்கள் ஊழியம் ஈடு இணையற்றது - நீங்கள் செய்வதை நீங்கள் மட்டுமே செய்ய முடியும்! உங்கள் ஊழியம் பரஸ்பர பரிமாற்றம் பெற்றது - உங்களுக்கு ஊழியம் செய்ய கர்த்தர் சித்தமுள்ளவராக இருக்கிறபடியால் நீங்கள் அவருக்கு ஊழியம் செய்கிறீர்கள்! உங்கள் ஊழியம் வடிவமைக்கப்பட்டது - நீங்கள் தேவனுடைய வெளிப்படுத்தப் பட்ட திட்டத்தை உங்கள் ஊழியத்திற்கு பின்பற்றுகிறீர்கள்! உங்கள் ஊழியம் ஆக்கப் பூர்வமானது - கிறிஸ்துவின் சரீரத்தை நீங்கள் எடுத்துக் கட்டுகிறீர்கள்!*

*கிறிஸ்தவனாக ஆனது உங்கள் வாழ்க்கைக்குள் அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்திருக்கிறது. மிகப் பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று கர்த்தருடைய நாமத்தில் நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறீர்கள் என்பது. உங்களுடைய கிறிஸ்தவ ஊழியத்தின் மூலம், நீங்கள் தேவனுக்கு மகிமையைச் செலுத்தி கிறிஸ்துவின் சரீரம் (சபை) வளர உதவுகிறீர்கள்!*

---

குறிப்புகள்

[1]Wendell Winkler, *The Mission of the Local Church* (Fort Worth, Tex.: Winkler Publications, 1971), 9. [2]காண்க *லூக்கா 12:42, 43, 47, 48; 1 தீமோத்தேயு 1:12; பிரசங்கி 9:10.*